DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ஜோதி பாலன் | Father/Husband Name : முருகன் |
| Age : 35 | Village : வி. சுந்தரலிங்காபுரம் |
| Taluk : | Calling : காவலாளி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 Mar 2026 15:13

(A3, A4 Present) (A1, A2, A5 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் வி.சுந்தரலிங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விருதுநகர் மருத்துவக் கல்லூரியில் காவலாளியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது, ஒன்றாவது எதிரி முருகேசனை பார்த்துள்ளேன், அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

2. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற போது நான் நிஷா இண்டஸ்ட்ரியல் சர்வீஸ் என்ற நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்தேன். நிஷா இன்டஸ்ட்ரியல் சர்வீஸ் என்ற நிறுவனம் செக்யூரிட்டி சர்வீஸ் செய்யும் நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்திற்கு கீழ் தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள ஏர்டெல் மற்றும் வோடபோன் நிறுவனத்திற்கு சொந்தமான 500 டவர்களை பாதுகாப்பதற்காக ஹைவே பட்ரோல் செய்ய வேண்டியது எங்களுடைய பணி ஆகும்.

3. சாத்தூர், சங்கரநத்தத்தில் பேச்சிமுத்து என்பவரின் நிலத்தில் ஏர்டெல் டவர் இருந்தது. அது நிறுவப்பட்டு 12 ஆண்டுகள் முடிந்திருந்தது. ஆகையால் அந்த டவரை 25.08.2019 ம் தேதி கழற்றி அந்த இடத்திலேயே ஓரமாக அடுக்கி வைத்திருந்தோம். அதன் எடை சுமார் 2 டன் இருக்கும். என்னுடன் செக்யூரிட்டி சர்வீஸ் வேலை செய்த பரமானந்தம் என்பவர் 02.09.2019 ஆம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது எங்கள் நிறுவனத்தால் கழற்றி வைக்கப்பட்டிருந்த கம்பிகள் இருந்தது. 05.09.2019 ஆம் தேதி காலை 05.00 மணிக்கு நானும், என்னுடன் வேலை செய்யும் வைரமுத்து என்பவரும் அந்த இடத்திற்கு சென்றபோது கழற்றி வைக்கப்பட்டிருந்த சுமார் 2 டன் கம்பிகள் காணவில்லை.

4. மேற்படி கம்பி காணாமல் போன விபரத்தை எங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்துவிட்டு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) ஏர்டெல் நிறுவனத்தில் டவர் நிறுவும் ஒப்பந்த பணியில் இருந்த முருகேசன் என்பவர் மீது சந்தேகம் இருந்ததால் அவர் மீது புகார் கொடுத்தேன்.

5. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில் இருந்து 3 நாட்கள் கழித்து எங்களுடைய செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனத்தின் ஜோனல் கமாண்டர் எனக்கு போன் செய்து சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் தொடர்பான கம்பி கிடைத்துவிட்டதாகவும், காவல் நிலையத்திற்கு செல்லுமாறும் கூறினார். அதன்படி நான்

காவல் நிலையத்திற்கு சென்றபோது சங்கரநத்தத்தில் இருந்து காணாமல் போன சுமார் 2 டன் எடையுள்ள கம்பி அங்கேயிருந்தது. கம்பியை யார் எடுத்துச் சென்றார் என்பது தொடர்பாக போலீசார் என்னிடம் எதுவும் கூறவில்லை. **(இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.ஆர்.எண் 572/2019 இல் உள்ள டவர் ஆங்கில் கம்பிகள் நீதிமன்றத்தில் வைப்பதற்கு இடமில்லாத காரணத்தினால் சாத்தூர் நகர் காவல் நிலைய பொறுப்பில் இருந்து வருகிறது. அந்த வழக்கு தொத்துப் பொருட்கள் காணொளி மூலம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டது. அதுதான் சம்பவ இடத்தில் இருந்து திருடிச் செல்லப்பட்ட கம்பிகள் என்று சாட்சி அடையாளம் காண்பித்தார். அந்த கம்பிகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த நீதிமன்ற தலைமை எழுத்தர் உடனடியாக சாத்தூர் நகர் காவல் நிலையத்திற்கு சென்று புகைப்படம் எடுத்து, பஞ்சநாமா தயார் செய்ய உத்தரவிடப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

6. நிஷா இன்டஸ்ட்ரியல் சர்வீஸ் என்ற நிறுவனம் செக்யூரிட்டி சர்வீஸ் என்றாலும், பொருட்களை பாதுகாக்க வேண்டியது அதனுடைய பணி என்றாலும் சரிதான். ஒவ்வொரு டவரிலும் என்னென்ன பொருட்கள் இருக்கிறது என்பதற்கு தனித்தனி பதிவேடு இருக்கிறது என்றால் சரிதான். ஒவ்வொரு டவரும் அது எங்கே அமைந்துள்ளது என்பதற்கான Location map மற்றும், Town ID, ஒவ்வொரு டவரும் எவ்வளவு ப்ரிக்குவன்சி செய்யப்படுகிறது என்பது தொடர்பான விபரங்கள் தனித்தனியாக இருக்கும் என்றால் சரிதான். டவர் மாட்டுவது மற்றும் பிரிப்பது எதுவும் எங்களுடைய பணி கிடையாது என்றால் சரிதான்.

7. நாங்கள் ஒவ்வொரு இடத்திற்கும் செல்கிறோம் என்பதை காண்பிப்பதற்கு அந்த இடத்தில் உள்ள பதிவேட்டில் கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த பதிவேடுகளை இந்த வழக்கில் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் இல்லை. ஒவ்வொரு டவர் இருக்கக்கூடிய பகுதிகளும் பாதுகாப்பு பகுதி என்று டவர் இருக்கும் இடத்தை சுற்றி 60 அடி தூரத்திற்கு வேலி அமைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த வேலி ஐந்து அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அதில் ஒரு நபர் மட்டும் உள்ளே செல்லக்கூடிய வகையில் ஒரு சிறிய வழி இருக்கும் என்றால் இரண்டு கதவுகளுடன், ஒவ்வொரு கதவும் மூன்று அடி அகலத்தில் இருக்கும். அந்த கதவில் பூட்டு போடப்பட்டிருக்கும் என்றாலும், வெளிநபர்கள் அதற்குள் செல்ல முடியாது என்றாலும் சரிதான்.

8. திருடு போனதாக கூறப்படும் டவர் ஏர்டெல் நிறுவனத்திற்கு சொந்தமானதா அல்லது ஜியோ நிறுவனத்திற்கு சொந்தமானதா என்பதை பதிவேட்டை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். ஏர்டெல் நிறுவனத்தின் அலுவலகங்கள் எங்கே இருக்கிறது என்றால் சென்னை மற்றும் மும்பையில் இருக்கிறது. ஏர்டெல் நிறுவனத்தின் டவர்கள் அனைத்தும் அந்த நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்த கம்பிகள், சங்கர நத்தத்தில் இருந்து திருடப்பட்டதாக கூறும் டவரில் இருந்த கம்பிகள் தான் என்று குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான்.

9. ஒவ்வொரு டவரிலும் மொத்தம் எத்தனை ஆங்கில் இருக்கிறது என்பதற்கும், எத்தனை போல்ட் இருக்கிறது என்பதற்கும் தனியாக பதிவேடு உண்டு

என்றால் சரிதான். பிரிக்கப்பட்ட டவர் எந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதற்கும் பதிவேடு உண்டு என்றால் சரிதான். பிரிக்கப்பட்ட டவரை வேறு இடத்தில் மாற்றுவதற்காக பிறப்பிக்கப்படும் உத்தரவு எதுவும் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மொத்தம் எத்தனை ஆங்கில் வைக்கப்பட்டிருந்தது என்பதும், அதில் எத்தனை ஆங்கில் காணவில்லை என்பது தொடர்பாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

10. ஒவ்வொரு ஆங்கிலும் எவ்வளவு நீளம் மற்றும் எவ்வளவு எடை இருக்கும் என்பது எனக்கு தெரியாது என்றால் சுமார் 12 அடி நீளம், 6 அடி நீளம் என வெவ்வேறு அளவுகளில் இருக்கும். 12 அடி நீளம் இருக்கக்கூடிய ஆங்கிலின் எடை சுமார் 150 கிலோ இருக்கும். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை பெரிய ஆங்கில், எத்தனை சிறிய ஆங்கில் இருக்கிறது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். டவரை பிரித்த பிறகு அந்த ஆங்கிலை எங்கே வைத்திருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் டவர் இருந்த இடத்திலேயே வைத்திருந்தார்கள். அது பூட்டப்பட்டிருந்த இடம் என்றால் சரிதான்.

11. ஆங்கில் காணவில்லை என்பது தொடர்பாக நான் ஏர்டெல் கம்பெனிக்கு எப்பொழுது தகவல் கூறினேன் என்றால் என்னுடைய உயர் அதிகாரிக்கு 05.09.2019 ஆம் தேதி தெரிவித்தேன், அவர்கள் ஏர்டெல் கம்பெனிக்கு தெரிவித்தார்கள். நான் எங்களுடைய நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக தெரிவித்தேனா என்றால் எங்களுடைய ஜோனல் அதிகாரி திருநெல்வேலியில் இருக்கிறார், அவரிடம் கூறினேன், அவர் மின்னஞ்சல் மூலம் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தார். என்னுடைய உயர் அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தாரா என்றால் திருநெல்வேலியில் உள்ள ஜோனல் அதிகாரி வந்து பார்த்தார். அவர் ஆய்வு செய்தபோது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். என்ன பொருட்கள் எல்லாம் காணாமல் போனது என்பதை அவர் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினாரா என்றால் இல்லை, அவர் குறித்துக் கொண்டார்.

12. நாங்கள் சென்று பார்த்தபோது வேலி பிரிக்கப்பட்டிருந்ததா அல்லது பூட்டு உடைந்திருந்ததா என்பதை நான் பார்க்கவில்லை என்றால் கிழக்கு பக்கம் உள்ள வேலி பிரிக்கப்பட்டிருந்தது. டவர் இருக்கக்கூடிய பகுதிக்கும் அந்த இடத்தின் உரிமையாளர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தொலைவில் இருக்கும். அந்த பகுதியில் மொத்தம் எவ்வளவு வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 50 வீடுகள் இருக்கும். டவர் இருந்த இடத்திற்கு எதிரில் கோவில் இருக்கிறது, அது என்ன கோவில் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து ஆய்வு செய்தார்களா என்றால் ஆய்வு செய்தார்கள், நான்தான் அவர்களை அழைத்து சென்றேனா என்றால் நான்தான் அழைத்து சென்றேன்.

13. எங்களுடைய பதிவேடுகள் மற்றும் இடத்தின் அமைப்பு ஆகியவற்றை நான் போலீசாரிடம் காண்பித்தேன் என்றால் சரிதான். டவர் நிறுவனத்திலிருந்து யாரும் வரவில்லை என்றால் சரிதான், செக்யூரிட்டி சர்வீஸ் தான் அந்த டவருக்கு பொறுப்பு என்பதால் அவர்கள் வரவில்லை. டவரை மாற்றுவதற்கான பணி எங்களுக்குரியதல்ல என்றால் சரிதான். டவர் முறையாக செயல்படுகிறதா என்பதை பார்ப்பது தான் எங்களுடைய பணி என்றால் சரிதான்.

14. சங்கரநத்தத்தில் உள்ள டவர் இருந்த இடத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டை பார்த்தால் 02.09.2019 ஆம் தேதி என்னுடன் பணியாற்றியதாக கூறப்படும் பரமானந்தமும், 05.09.2019 ஆம் தேதி நானும் அந்த டவர் இருந்த பகுதிக்கு சென்றேனா

என்பது தெரியும் என்றால் சரிதான். டவரை பிரிக்கக்கூடிய பணியாளர்கள் அவர்களுடைய பொறியாளருடன் சேர்ந்து எத்தனை நாள் வேலை செய்து டவரை பிரித்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒரு டவரை நாங்கள் எத்தனை நாள் இடைவெளியில் சென்று பார்ப்போம் என்றால் ஒரு மாதத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை செல்வோம், காட்டுக்குள் இருக்கின்ற டவர் பகுதியில் அடிக்கடி திருடு போவதாக இருந்தால் வாரத்திற்கு ஒருமுறை செல்வோம். ஒவ்வொரு நாளும் நாங்கள் என்ன பணி செய்தோம் என்பதை எங்களுடைய அலுவலகத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

15. பரமானந்தம் என்னுடன் சேர்ந்து வந்து டவர் இருந்த இடத்தை பார்த்தாரா என்றால் இல்லை, நானும் பரமானந்தமும் எங்களுடைய பணியை மாற்றி மாற்றி பார்த்துக் கொள்வோம், அவர் பணியில் இருக்கும் போது எனக்கு விடுப்பு, அவர் விடுப்பில் இருக்கும்போது நான் பணியில் இருப்பேன். பரமானந்தமும் ஒவ்வொரு முறையும் டவரை சென்று பார்ப்பது தொடர்பாக எங்களுடைய நிறுவனத்திற்கு அறிக்கை கொடுத்திருப்பார் என்றால் சரிதான். டவர் கம்பிகள் காணாமல் போனது தொடர்பாக எங்கள் நிறுவனத்தில் இருந்து என்னிடம் என்னை காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு கூறினார்களா என்றால் என்னுடைய ஜோனல் கமாண்டர் புகார் கொடுக்குமாறு கூறினார். அது எழுத்து மூலமாக கொடுக்கப்பட்ட தகவலா என்றால் போன் மூலமாக கொடுக்கப்பட்டதாகும்.

16. 1வது எதிரி முருகேசன் தான் டவர் கம்பிகளை எடுத்துச் சென்று இருப்பார் என்று என்னிடம் புகார் கொடுக்க சொன்னது யார் என்றால் என்னுடைய ஜோனல் கமாண்டர் ஆவார். அவருடைய பெயர் என்னவென்றால் டேனியல் ஆபிரகாம் ஆகும். எவ்வளவு பொருள் காணாமல் போனது என்பது எனக்கு தெரியாது என்றாலும், புகார் கொடுக்க கூறியதன் அடிப்படையில் நான் புகார் கொடுத்தேன் என்றாலும் சரிதான். நான் புகார் கொடுத்ததில் இருந்து எத்தனை நாள் கழித்து கம்பியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்றால் மூன்று நாட்கள் கழித்து பார்த்தேன். காவல் நிலையத்தில் விசாரித்த போது போலீசார் வாக்குமூலங்களை பதிவு செய்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் யாரெல்லாம் சாட்சியாக விசாரித்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் என்னுடன் பணியாற்றும் வைரமுத்து என்பவரை விசாரித்தார்கள்.

17. நான் பரமானந்தத்தை விசாரிக்கவில்லை என்றால் நான் அவரிடம் கேட்டபோது அவர் 2 ஆம் தேதி டவர் கம்பிகள் இருந்ததை பார்த்ததாக கூறினார். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எங்கள் நிறுவனத்தால் பாதுகாக்கப்பட்ட பொருள் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த பொருட்களை திரும்ப கேட்டு யாரும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி மீது உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

18 Mar 2026 16:04

Judicial Magistrate 2, Sattur